*1967 நவம்பர் 27]* [Thiru C. Govindarajan]

மாவட்ட கலெக்டர் முதல் பல்வேறு மாவட்டங்களில் கன்சிலியேஷன் நடந்தும் பலன் ஏற்படவில்லை. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மூலம் நடைபெற்ற சமாசப் பேச்சில் லேபர் கமிஷனர் கொடுத்த ஆலோசனையைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை. தொழிலாளர்களுடைய ஊதியத்தைக் கூடக் கொடுக்காமல் உற்பத்தி செய்து வைத்திருக்கக்கூடிய பொருள்களை வெளியே கடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டவிரோதமான முறையில் சம்பளத்தைக் கூடக் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஏராளமான குடும்பங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சனையை விட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை வேறு இருக்க முடியாது என்பதால் இதைப்பற்றிச் சிறிது நேரம் விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனையில் அரசாங்கம் சட்டப்படி என்னென்ன செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஒத்துழைப்போடு நிர்வாகத் தோடு பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தினார்கள். அதிலே, அவர்களுக்கு லாபம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியும், போனஸ் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியும், குறைந்த பட்ச போனஸ் கொடுக்க வேண்டுமென்றால் எந்த அளவு கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அரசாங்க அளவில் கூட அவர்களை அழைத்து பேசப்பட்டது. லேபர் கமிஷனரும் இரு தரப்பினரையும் அழைத்து தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இதற்குப் பின்னாலே, சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கக் கூடுமோ அதை எடுப்ப தற்கும் அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது. ஏற்கனவே தர வேண்டிய சம்பளத்தைக் கொடுக்கவில்லை என்றால் அதற்கும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறது. அந்த வழக்கையும் அரசாங்கம் முன்னின்று நடத்தும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பொருத்தமானது அல்ல. கேள்விகளாகவோ வேறு முறையிலோ கொண்டு வரலாமே தவிர, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு உட்பட்டது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை, நம் விதிகள் 50 உள்விதி 8-ன் கீழ், அனுமதிக்கக் கூடாதென்று பல முறை தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 28—7—1953-ல் அப்போதிருந்த பேரவைத் தலைவர் அவர்கள் இதே காரணத்தைத் தொழில் தகராறு என்று கூறி அனுமதி மறுத்து உள்ளார்கள். பின், எத்தனையோ முறை, ஏறத்தாழ 25 முறைகளுக்கு மேல், வேலை நிறுத்தம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவரக் கூடாதென்று தீர்ப்புகள் இருப்பதால், அந்தத் தீர்ப்புகளையொட்டி, இதற்கு அனுமதி கொடுப்பதற்கு மறுக்கவேண்டியவனாக இருக்கிறேன். மு.ப. 10-30